1973 மார்ச் 27]

Private High School taken over by the Government

* 275 *Q.*—THIRU S. MUTHUSWAMY : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the Correspondent of any of the Private High School in Tirunelveli district has addressed the Government for the take-over of that high school; and

(*b*) if so, the action taken thereon ?

தனியார் உயர்நிலைப் பள்ளியை அரசு ஏற்றுக்கொள்ளுதல்

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் ஏதேனும் ஒரு தனியார் உயர்நிலைப்பள்ளியை அரசே எடுத்துக்கொள்ளும்படி அப்பள்ளி நிர்வாகி விண்ணப்பித்துள்ளாரா ?

(இ) ஆமெனில், அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) திருநெல்வேலி மாவட்டம், காளாம்பட்டி இந்து உயர்நிலைப் பள்ளியின் தாளாளர் அப்பள்ளியை அரசு ஏற்று நடத்தும்படி கோரினார். அக்கோரிக்கையை ஆராய்ந்து 1972-73 ஆம் கல்வி ஆண்டு முதல் அப்பள்ளியை அரசினர் உயர்நிலைப்பள்ளியாக நடத்த அரசு உத்தரவிட்டுள்ளது.

Midday Meals Scheme

* 276 *Q.*—THIRU S. MUTHUSWAMY : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the Government will arrange to increase the number of poor pupils benefitted by the Midday Meals Scheme in the Elementary Schools belonging to Madras Corporation ; and

(*b*) if so, when it will be increased ?

மதிய உணவுத் திட்டம்

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை மாநகராட்சியில் தொடக்கப்பள்ளிகளில், படிக்கும் ஏழை மாணவர்களுக்கு மதிய உணவு வழங்குவதை எண்ணிக்கையில் அதிகரிக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

(இ) ஆமெனில், எப்போது செய்யவுள்ளது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) இப்பொருள் சென்னை மாநகராட்சியினரால் பரிசீலிக்கப்பட வேண்டியது.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

* 277 Q.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) the number of food poisoning cases that came to the knowledge of the Government in connection with the Midday Meals Scheme during the last five years; and

(b) (1) the names of the institutions involved in such cases; and (2) the number of students affected?

Midday Meals Scheme

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கடந்த ஐந்தாண்டுகளில் நண்பகல் உணவு தொடர்பாக அரசின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்ட உணவில் நச்சுப் பொருள் கலந்த நேர்வுகள் எத்தனை?

(இ) அத்தகைய நேர்வுகளில் தொடர்புடைய (1) கல்வி நிலையங்களின் பெயர்கள், (2) பாதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை குறித்த விவரங்கள் யாவை?